உ

கடவுள் துணை.



மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா,

சுக்கான்கல்பட்டி என்ற காளாகூஷிபுரம்,

மகா-ா-ா-ஸ்ரீ V. N. S.

சீனியப்ப நாடார் அவர்கள் குமாரர்,

# முத்துச்சாமி பாண்டியனவர்கள்

இயற்றிய

சதுரகிரி சுந்தர மகாலிங்க சுவாமி பேரில்

## அற்புத வழிநடை என்னும் ஆண் பெண் தர்க்க

# அதிசய அலங்காரம்.

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலூகா சின்னமனூர்,

கருங்கட்டாங்குளம் மகா-ா-ா-ஸ்ரீ

ஸ்ரீமான் S. பொன்னுச்சாமித் தேவரவர்கள்

விருப்பத்தின்படி

சுக்கான்கல்பட்டி என்ற காளாகூஷிபுரம்

V. N. S. S. அய்யாச்சாமி நாடாரவர்களால்,

தேனி, ஹக்கீம் பிரஸ் என்னும்

...ச்சியந்திரசாலையில்

...பதிப்பிக்கப் பெற்றது.

...] 1932. [ காபி 1000

காபி ரைட்.

305

3 JUL 19..

Q23:417

M32

149493

13 JUL 193

## ஆண் பெண் தர்க்க

# அதிசய அலங்காரம்.

### வெண்பா

விரைதயா யிலங்குங்காட்சி விளங்கிடுஞ் சதுரகிரி
சுந்தரமகாலிங்க சுவாமியின்மேல்—சிந்தையுடன்
அற்புத சிந்து யென்னும் அலங்காரங்கூற நல்ல
கற்பகவி நாயகனே காப்பு.

### தங்கரத்தினப் பாட்டு

ஆண். சிந்தைக்கினியவளே சீர்பொருந்துங் கண்ணாளே
சுந்தரலிங்க நாதரை-என் தங்கரத்தினமே
துதிகூற வேணுமடி-என் பொன்னுரத்தினமே

பெண். ஆசைச்சிகாமணியே அருமையுள்ள நாயகரே
வாசலிங்கர் கோவிலுக்கு-என் வசனகெம்பீர
வந்திடுவேனுங்கள் கூட-என் மதன சிங்கார

ஆண். காரிகையே நாம் வசிக்கும் காளாட்சிமா நகரில்
மாரியம்மன் சன்னதியில-என் மயிலே அஞ்சுகமே
மாதே துதித்திடுவாய்-என் குயிலே ரஞ்சிதமே

பெண். ஆடையலங்கரித்து ஆபரணந் தானணிந்து
சோடாக போய்வருவோம்-என் துரையே கண்ணாள
துலங்க வளங்காட்டிடும்-பொன் நிறையே குணாள

ஆண். சங்கீதக்கச்சேரிகள் தாளஞ் சுரக்கியான மெல்லாம்
இங்கிதமாய் நடக்கும்-என் தங்கந்தில்லாலே
இனிய கடை வீதியும்பார்-என் பொன்னுந்தில்லாலே

பெண். சுந்தரலிங்கர் கோவில் தூரத்திலிருப்பதனுல்
எந்த வழிக் கேகிடலாம்-என் யிலங்கும் நாயகமே
யியல் பானபாதை கூறும்-என் துலங்கும் தாயகமே

ஆண். சின்னமனூர் பாதை சென்றுல் சீமான் பொன்னுச்சாமி
யென்னும்
மன்னர் குலபூமான் முன்னே-என் மாதுளம் பழமே
மானே விடை பெற்றிடலாம்-என் கோதில்லாவுளமே

பெண். ஆயுள் வரையும் நம்மை ஆதரிக்குந் தன்மைவாய்ந்த
தூய குணப் பொன்னுச்சாமி துலங்கும் பாக்கியமே
துரையைக் கண்டு போனுல் நலம் யிலங்கும் யோக்கிய

ன். தங்கமட மயிலே    தாளம்பூ வாசகமே
மங்கம்மாள் சாலை வழி-என    மருவே மாமணமே
மாமணியே சென்றால் மேன்மை    திருவே பூமணமே

பெண். ராஜதுரை நாயகமே    ரவிவர்மா வோவியமே
நேசவடிவழகா-என்    நிறைந்தவுல்லாசமே
நேர்த்தியான சோலைவளம்    சிறந்தசல்லாபமே

ஆண். அருமைச்சாலைப் புன்செய்களும்    அழகானகண்மாய்களும்
தருமக்கிணறும் பாரு-என்    சிங்காரச் சோடி
தாகந்தணிந்திடலாம்-என்    தங்கம்மே வாடி

பெண். சித்திரைச் சாலைகளும்    சிறந்தவளக் கண்மாய்களும்
அத்துவான கானகத்தில்-என்    ஆசைக்குணவாளா
அருமையான தர்மமையா-என்    நேசமணவாளா

ஆண். கன்னியே முல்லைக்காடும்    கா. பி. சிறையும்
சின்னமனூர் தன்னைச் சேர்ந்த    சிததிரைச்சோதிகளே
சீர் கருங்கட்டாநகர்பார்    விஸ்திர வீதிகளே

பெண். ஜோரான வீடுகளும்    துலங்குங் கடைத்தெருவும்
நேரான வீதிகளும்-என்    நேசவடி வழகா
நேர்த்தியாக தோணுதையா-என்    வாசமுடைய போகா

ஆண். ராஜதுரைப் பொன்னுச்சாமி    ஞாய வழக்குத் தீர்த்து
தேசமெல்லாம் பேரு பெற்ற    சிங்க லெக்கணமே
சீமான் வீட்டை பாரடி-என்    தங்க பொற்துணமே

பெண். பார்த்திபாயிச்சாமிதுரை    பாரில் பெருவழக்கும்
தீர்த்து முடிவுசெய்ய    சிறந்தகோமானே
தீராதி தீ[illegible]மை    நிறைந்த பூமானே

ஆண். பாண்டியன் பிரஞ்சுமேனும்    பகைத்த பெருங்கேசுக்கு
வேண்டிப் பஸ்காருங்கொண்டு    விளங்கும் பொன்மணியே
விரும்பியழைத்துப் போனார்    வழங்கும் நன்மணியே

பெண். அப்படியா மன்னவனே    அருமைப்பொன்னுச்சாமி செய்தி
செப்பி விடை பெற்றோமல்லோ    சீமைசித்திரமே
சென்றிடுவோம் மோட்டாருக்கு    நேமப்பத்திரமே

ஆண். கோமதி காரிலேறி    கோதை நாமள் சென்றோமானால்
காமத மில்லாமல் போகும்-என்    தங்கரத்தினமே
கையிலே ஏறிக்கொள்ளடி-என்    பொன்னுரத்தினமே

பெண். காதாயிக்கார் தனிலே நலமாக ஏறிக்கொண்டோம்
தோதாக வேறு மெட்டில்-என் தூயச்சிங்
சொல்லிவிளக்காட்டி வாரும்-என் நேயக்கெம

---

## லேசாகவே கொஞ்சம்—என்ற மெட்டு.

ஆண். பொன்னேயிலங்குதடி சின்னமனூர் தனிலே
சீலையம்பட்டி
என்ன உன்னதமடி
நன்னகர் காணுதடி

பெண். ஆகாயென்சொல்வேன் பொன் தேகாயிப்பாதைதனில்
தேனமிர்தான
வாகான பூமரமும்
பாகான மாமரமும்

ஆண். நாட்டமாய் காரு போகும் ரோட்டிற்கு கிழ்புரத்தில்
கன்னல்புளியில
கோட்டு ரறிகு வாயடி
பாட்டந் தெரிகு வாயடி

பெண். ஊருமதர்க்கமைந்த பேருநற் சோலைகளின்
எதிர்த்தெதிர்த்
சீரும் பெருகிடமெய்யா
காரும் வருகிறதையா

ஆண். மாரியம்மன் வாழும் வீரபாண்டி தனில்
சன்னதிமுன்னே
ஆறோடும் தாவுசீரடி
தேரோடும் கோவில் பாரடி

பெண். ஷோக்கு நவநீத வாக்குவழுவாத
துன்பங்கள் தூய
ஷேக்குத் தலையழகா
போக்குந்தல போயூகா

149493

ஆண். சித்தம மகிழ்வாக உத்தமியே பாரு
தேனிநகரோ
முத்தத்தேவம் பட்டியே
சுத்தத்தங்கக்கட்டியே

பெண். ரோட்டுந் தேனியில் காருஸ்டாண்டும் வீதிவெய்யார
கிராமபோனின
நீட்டும் சுத்தமாகுதே
பாட்டுச் சத்தங் கேட்குதே

ஆண். மயிலே ஹக்கீம் பிரசும் ஒயிலே மூமிணைஸ் கடையும்
சந்தை கடந்தோம்
குயிலே சீனைகடை நேரே
ரெயிலேதான் ஜல்தியாய் ஏறே

பெண். மிஞ்சியேபுகழோங்கிய அஞ்சுகாமிருவர்க்கொரு
என்போலனேக
பெஞ்சியுமமைந் திலங்குது
வஞ்சியழகுந் துலங்குது

கூடுஞ் சுதேசியும்—என்ற மெட்டு.

ஆண். சொர்னக்குயிலே நான் சொல்லுகிறேனடி
தோகையேயுன் னேசன்
வர்ணமயிலேபார் வந்திடும் கூட்டமே
வள்ளல்நதி ஸ்டேஷன் (சொ)

பெண். கல்விக்கு ஆசாரக் கண்ணுளாயிப்படி
கண்காக்ஷிகாணேனே சாமி
செல்வமிது போலே சீமைகளெங்குமே
சிறந்திருக்குமோ பூமி (க)

ஆண். யாண்டிப் பூமிவளம் பாரடி கண்மணி
யாதைதோறும் வண்டி நாட்டம்
ஆண்டிபட்டி ஸ்டேஷனழகென்ன சொல்ல
அன்னமேபார்ஜனக் கூட்டம் (சொ)

பெண். புண்ணிய நேர்மை பொருந்துங்குணவாளா
பூந்தி வடையென்னும் சத்தம்
கண்ணியமாய்ச் சோடா கலர் என்னும் பால்
காப்பி யென்பார்களோ நித்தம் (க)

ஆண். மானேயிரண்டுமலையைப் பிளந்துமே
மாலாய்த் தண்டுவாளம் நாட்டி
தானே றெயில் போகுந் தன்மைக்குச்செய்திட்ட
தைரிய மென்ன சீமாட்டி (சொ)

பெண். கோடித்திரவிய கோமானல்லாமல் யார்
கொட்டிடுவார் பணம் கூறும்
தேடியேயிப்படி செய்தாலே யேழு
ஜென்மத்திலும் நீங்காப் பேரும் (க)

ஆண். பாரோங்கும் உசிலம் பட்டிதானிறங்கு
பைங்கிளியே நாமள் சென்று
சீரோங்கிடுஞ் செல்வச் சிங்கமுத்து மாலே
சீமான் வீட்டிலன்னம் உண்டு (சொ)

பெண். மன்னவா சத்ரிய மகிபனில்லத்தில்
மகிழ்ந்துண்டோம் நல்ல சீரே
நன்னயமா யொரு நாகரீகமெட்டில்
நாட்டி வழி கூறும் நேரே (க)

## லாவணி—மெட்டு

ஆண். பார்மயிலே யுசிலம் பட்டிதனிற் பிரிந்து
பாண்டியன் காத்தமுத்து வேள் காரு காரு இ
பாங்குட நேராகத்தாணிப் பாறைவரையும் போகும்
பாவையே ஜல்தியாக யேறு யேறு

-600 008.

பெண். சீர்வொயில் மன்னுபிந்த சீமான்கார்மட்டுந்தானு
செல்லு மிந்தவழிக்குக் கூறும் கூறும் நல்ல
சிங்காரமாகப்பூமி சிறந்த வளங்களெல்லாம்
சீருளனே கூறியே வாரும் வாரும்

ஆண். கண்மணி குளக்கரையும் கடந்தோம் பாரடிசின்ன
கட்டலைத்துரைச்சாமிவேள் புண்யன் புண்யன் யெந்தன்
காதலிபார்சேடபட்டி காருண்யமங்கல்ரவும்
கமழ் பெத்தணசாமியோ கண்யன் கண்யன்

பெண். நன்மணியே வொய்பார நாகரீகத்துரையே
நன்செய் புன்செய் சிறந்த காடும் காடும் [illegible]
நாயகமீர வுயர்ந்த நல்லகட்டடமோங்கி
நகைக்கும் பதுமையுள்ள வீடும் வீடும்

ஆண். இன்பயிளவடிவே யிருபுரமுங்கடைகள்
யிலங்கும் பேரை நகரோ ஜோரு ஜோரு யின்னும்
இனிய தேவன்குரிகூி யென்னுங்கல்பட்டியதோ
இங்கித சுப்புலாபுரம் பாரு பாரு

பெண். அன்பு பெருகும் நேச அரசே பேரையூர்தனில்
அம்சம் பொருந்துங்கடை வீதி வீதி அதில்
அலங்கிர்தமிஞ்சும்மாதர் அருமை நடையழகை
அன்னங்கண்டாலும் நாணும் ஜோதி ஜோதி

ஆண் தங்கமே தெரியுதுபார் தானே ஸ்ரீ வில்லிபுத்தூர்
தாவுங்கோபுரவானே யெட்டி யெட்டி எந்தன்
தையலே வத்ராயிருப்பும் தாணிப் பாறை பாரிதில்
தங்கிப்போவதர்க்கென்ன அட்டி அட்டி

பெண். சிங்கமே யிவ்வூரதுபோல் சிகரக்கோபுரமெந்த
சீமையிலுங் கண்டதில்லே காட்சி காட்சி மிகும்
சில்லெனெ வத்ராயிருப்பும் சீலமிகுந்த நாடு
சீர்தாணிப் பாறையென்ன மாட்சி மாட்சி

கட்டப்போம்மு—என்ற மெட்டு

ண். மாணிக்கமே தோகை மாமயிலே—ஆசை மாமயிலே
மங்கையே தாணிப்பாறை கடந்தோம
ஏணிப்பாறைபாரு ஏந்திழையே
என்ன அதிசய மின்னரசே

பெண். காந்தரூபாஜீ கற்பகமே—நேச கற்பகமே
கமழும் முல்லைவனப் பாதைதானு
பாந்தமுடனந்த கோவில்வரை
பாரமலைதானே பார்த்திபனே

ஆண். பத்தினியே நேசப் பாக்கியமே—ஆசைப் பாக்கியமே
பாவையே தாகந் தணிப்பதற்கு
அத்தியூத்துநல்ல நீர்குடித்து
அழகுபசுக்கடை கண்டோமடி

பெண். தாமரை மாமலர்க்கண்ணாளா—சாமி கண்ணாளா
தண்ணீர் குடித்துங் களையாறுதே
காமதுரையே யடுத்து ஜலம்
கண்டா லுரையுங் களஞ்சியமே

ஆண் உத்தமியே பாண்டிச்சத்திரியன்—கண்ணே சத்திரியன்
உயரும் மதுரையாம் நெய்க்கடையே
ரத்தினசாமி மால் டானக்காரம்
நாயகியே மனம்போல் குடிப்போம்

பெண் என்னரசே யிந்தத்தேனமிர்தம்—சாமிதேனமிர்தம்
எல்லாச்சனங்களி னுசைதீர
நன்னயமாகக் கொடுப்பார்களா
நாயகரே யிந்தக்கானகத்தில்

ஆண் ஏராளமாய் நூறுகோடிஜனம்—தங்கம்கோடிஜனம்
எங்கெங்கிருந்துமே வந்தாலும்
தாராளமாகவே செய்குவாரே
தங்கமே மாபலிராஜன்போலே

பெண் நாதாயிவ்விதம் நடுக்காட்டில்—மன்னு நடுக்காட்டில்
நல்ல தர்மங்கள் செய்வதினுல்
தீதாகா தெந்தத்தல மறைக்கும்
திவ்ய மதிமுகா செப்பும் நாதா

ஆண் அன்னமே பாரடி பாம்புக்கேணி-கண்ணேபாம்புக்
ஆசாரவாசப்பசுக்கடையும்
பொன்னே பாரிக்கு யிருபுரமும்
பொருந்துங் கடை காபி ஓட்டல்களும்

பெண் பாவலர் மெச்சும் சிகாமணியே—ஆசைச்சிகாமணி
பந்தி பந்தியா யிருபுரமும்
அவலுடன் கடைகொண்டுவந்து
அமைத்திருப்ப ததிசயமே

ஆண் கண்ணேபார் சீனிப்பலாவடியான்—வாசப்பலாவடியா
கருப்பணசாமி கோவிலிதில்
எண்ணடங்காக் கிடாய் வெட்டதினல்
ஏரிபோல் ரத்தப்பெருக்கம்பாரு

பெண் செம்புச்சிலையா யென் சீராளனே—மன்னுசீராளனே
செப்ப வொண்ணுச் சேவல்தானறுப்பும்
கொம்புக்கிடாய்த் தலை குவியல்களோ
கோம்பை மலைபோல் இருக்கின்றதே

ஆண் பாக்கியமுள்ள பசுந்தேனே—மாதேபசுந்தேனே
பண்டித வள்ளல் மடமிதுதான்
யோக்கிய மென்ன வுரைத்திடலாம்
உல்லாசக்கண்ணே உயர்வளமே

பெண் பூமி புகழ்ந்திடும் பூமானே—நேசப்பூமானே
பொங்கல் மிகும் மகாலிங்கநாத
சாமிக்கு அர்ச்சனை செய்கிறுரோ
சாற்றும் எந்தன் யூகச்சங்கீதனே

ஆண் காதல் கடலே கனிரசமே—ஆசக்கனிரசமே
காணுதுபார் திருக்கூட்டங்களே
பூதலத்துள்ள பரங்களெல்லாம்
புண்ணிய லிங்கரை போற்றவந்தோர்

பெண் காயாசம் பூண்ட பரதேசிக்கு—சாமி பரதேசிக்கு
காசுகள் போடுறுர் நாமுந்தந்தால்
ஆயாசம் தீருமே ஆணழகா
அன்பாகநாமும் கொடுத்திடுவோம்

## ஆனைமாமுகவனே—என்ற மெட்டு

ா மா மகாலிங்கமே நல்ல மாற்றுயருந் தங்கமே
மங்கைமார்கள் முதல் தங்கியாபேர்களும்
மகிழுவாரே சங்கமே

ண் அருமை நேசவுரையே யெந்தன் அழகு தங்க நிறையே
அடிதொழுது பெண்கள் முடியுலர்த்திப்பொங்கும்
அம்சமென்ன துரையே

ஆண் தேனே குயிலே வாடி நாமள் திவ்யமாக நாடி
தேங்காய் பழங்கள்கூடம் பாங்காய் புட்பம் கொண்டு
தெரிசிப்போமேகூடி

பெண் தேசம் புகழும் நாதா உயர் தேனமிர்தப்போதா
தேவையானதெல்லா மாவலாகவாங்கி
சேவித்தோமே தோதா

ஆண் ஆசை ரூப மெல்லியே பார் அருளானந்த வல்லியே
அன்பாய் கையதனை முன்பாய்வையே கூடும்
ஆருள்ளத்திற் சொல்லியே

பெண் என்ன ஆச்சரியமே கையை இழுக்கின்ற மயமே
எந்தப் பூவினுலும் இந்தக் கோவில்போன்ற
தெங்குங்காணேன் நயமே

ஆண் எழுதினுசு யினமே உள்ள இலை மசத்தில் ஜனமே
எந்த வயர்வலிக்கு மிந்தப்பட்டை தனை
எடுத்து போவார் தினமே

பெண் சதுரகிரியை நாமே வருடந்தவரிடாது தாமே
சங்கீதங்கள்பாடி யிங்கீதமாய் த்தேடி
சாமி போற்றுவோமே

ஆண் எங்கும் புகழும் பூமியே எஸ் எஸ் முத்துச்சாமியே
இயற்று மிந்த நூலை உயற்றியாதரிப்பீர்
எல்லாக் கண்ய நேமியே

சுபம் சுபம்

முற்றுப்பெற்றது

ஹக்கீம் பிரஸ்
தேனி
1932